# திருக்குர்ஆன்
# நோக்கங்களும் பாடங்களும்

ஸூரா அல் பாதிஹா முதல்
ஸூரா அல் அன்பியா வரை

தலைப்புகள் - நுட்பமான விரிவுரைகள்
நினைவூட்டல் - வழிகாட்டல்கள்

ஆக்கம் மற்றும் சிந்தனை
அஷ்ஷைக் அர்ஷத் பஷீர் உமரீ மதனீ
*MBA, Pursuing Ph.D from Switzerland*
*Founder & Director – AskIslam Pedia.Com*

மொழிபெயர்ப்பாளர்
அஷ்ஷைக் அல்ஹாபிழ்
ம.முஹம்மது இஸ்மாயீல் உமரீ - உடன்குடி

ASK ISLAM PEDIA

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# முன்னுரை

திருக்குர்ஆன்! 'உச்சம் தொடுவதற்கும்', 'வீழ்ச்சிக்கும்' பொறுப்பேற்கும் புனிதமான வேதம் ஆகும்.

இப்புனித வேதத்தை, வாழ்வின் தாரக மந்திரமாகக் கொண்டால் - இதில் சீரிய முறையில் சிந்தனையைச் செலுத்தினால் - இவ்வேதத்தில் புதைந்துள்ள ஞானத்தையும், அருளப்பட்ட நோக்கம் மற்றும் குறிக்கோள்களையும், அறிந்திட முயன்றால் - இதனை உள்ளத்தில் இருத்தி, செயலில் நடைமுறைப்படுத்தினால் - அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு, கண்டிப்பாக வெற்றி நிச்சயம்..! அதே சமயம் இவைகளில் அலட்சியம் காட்டும் மனிதனோ, தோல்விக்கு இரையாகுவான்.

இத்தகைய திருக்குர்ஆனை எளிய முறையில் புரியவைப்பதற்காகவே, இந்நூல்.., திருக்குர்ஆனின் தலைப்புகள் - பாடங்கள் - நோக்கங்கள் - இலட்சியங்கள் - என உருவாக்கப்பட்டு உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகிறது. இதற்காக 'எல்லாம் வல்ல அல்லாஹ்'விற்கு, எண்ணிலா நன்றிகளை உரித்தாக்குகிறோம். ஆரம்பம் முதல் இறுதிவரை இந்நூல் கடந்துவந்த நிலைகளையும், உங்கள் கவனத்திற்குத் தருகிறோம்.

இந்நூலில் 114 – அத்தியாயங்களையும் அறிமுகப்படுத்த முயன்றுள்ளோம். பற்பல நூல்கள் மற்றும் ஆசிரியர்கள், தந்த பாடங்களின் கருத்துப் பிழிவுகளில், காணக்கிடைத்த அற்புதமான குறிப்புகளால், இந்நூலை மெருகேற்றியுள்ளோம்.

## நூலின் தலைப்புகள்

ஒவ்வொரு அத்தியாயத்திலும் பின்வரும் தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- வசனம் அருளப்பட்ட இடம்
- சில நோக்கங்கள்
- சில தலைப்புகள்
- சில பாடங்கள் -
- சில வசனங்களுக்கிடையே உள்ள தொடர்புகள் மற்றும் விரிவுரைக் குறிப்புகள்

- ஒவ்வொரு அத்தியாயத்திலும் குறிப்பிட்ட சில வசனங்களின் முழுமையான விளக்கத்திற்காக – அவை சிந்தையில் சிறப்பாகப் பதிவதற்காகத் தரப்பட்டுள்ள ‘ஹதீஸ்’கள்.

அமைதி தவழும் சமூகத்தைக் கட்டி எழுப்புகின்ற - ஈருலக வெற்றிக்கு வழிவகுக்கின்ற - வசனங்கள் பின்வரும் எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளன.

நோக்கங்களுக்காக – 574 வசனங்கள்
தலைப்புகளுக்காக – 1036 வசனங்கள்
படிப்பினைகளுக்காக – 3831 வசனங்கள்

(குறிப்பு: இந் நூலின், சில இடங்களில் ஆதாரங்கள் இடம் பெறவில்லை. ஏனெனில் அவை, ஆசிரியர்களிடம் இருந்து, செவியேற்கப்பட்ட - அவர்களுடைய ஆய்வின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.)

### நூல் உருவான நிலைகள் ...!

இந்நூல் உருவாக மூன்று வருடங்களுக்கும் மேலானது. ஆரம்பமாக இது ஒரு பாடத்திட்டத்தில் கையேடாகத் தரப்பட்டது. பிறகு இதில் கூடுதலாகச் சில நோக்கங்களும், படிப்பினைகளும் இணைக்கப்பட்டு, அழகுற அச்சிடப்பட்டு, வாசகர்களுக்கு வழங்கிடும் நற்பேறு கிட்டியது.

### மேலாய்வின் நிலைகள்

பிறகு தகுதிமிக்க உலமாக்கள், இதனை மேலாய்வு செய்தனர்; ஆலோசனைகள் பல தரப்பட்டன; (உருது)மொழி நடையின் தரம் மேம்படுத்தப்பட்டது.

### சிறப்பு மேலாய்வின் நிலைகள்

மற்றொரு முறை இந்நூல் சிறப்பு மேலாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதற்காக மூன்று ஆலிம்கள் கொண்ட சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் இதனைக் கவனமாகச் செம்மைப்படுத்தினர். அத்தியாயங்களின் நோக்கங்கள், தலைப்புகள், பாடங்கள், வசனங்களின் பரஸ்பர தொடர்புகள், என அனைத்திலும் அதீத கவனம் செலுத்தி, நூலின் உள்ளடக்கத்தை முறைப்படுத்தியுள்ளார்கள். அதிகமான பயனைப் பெற்றிட – ஆதார நூல்களை நாடும் வகையிலும் இந் நூலில் சிரத்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் குறைகளில்லாதவன் ‘அல்லாஹ்’ மட்டுமே! மனிதர் எனும் காரணத்தால், பிழைகள் வந்திருப்பின் சுட்டிக்காட்டுங்கள்; நன்றி கூற வாய்ப்பளியுங்கள்.

### நூல் - முழுமைபெற்ற நிலைகள்

பொதுவாக ஒரு நூல் பிரசுரமாவதற்கு முன், கடைசிக் கட்ட குறிப்பு (Protocall) களுக்கேற்ப, பரிசோதனைப் பட்டியல்படி

(Check list) முந்தைய நிலைகளில் உள்ள ஒவ்வொன்றும், சிறப்பு ஆய்விற்குள் கொண்டுவரப்படும். الحمد لله இதற்காக, நெடிய – அதே சமயம் போதிய காலகட்டம் ஆகியுள்ளது. இந்நூலின் ‘தூய்மை’ - மற்றும் ‘நம்பகத் தன்மை’களில், கவனமாக இருக்க, ‘உலமா’ பெருமக்கள் இயன்றவரை முயன்றுள்ளார்கள்.

### யார் யாருக்காக இந்நூல்..?

1- திருக்குர்ஆன் விளக்கவுரைகளுக்கான அமர்வுகளில் பயன்படுத்தலாம்.

2- அறிஞர்களின் மேற்பார்வையில், பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளின் உயர்வகுப்பு மாணவர்களுக்காக!

3- பிள்ளைகளின் பொறுப்பாளர்கள் தம் பிள்ளைகளுக்கு, ஒழுக்கப் பயிற்சி தந்திடத் தேவையான ஒரு வழிகாட்டும் பிரதியாகத் திகழ்கிறது.

4- குறிப்பாக இந்நூல், இரமலான் மாதத்தில் திருக்குர்ஆனை விளக்குகின்ற, முக்கியமான சாதனம் ஆகும்.

5- மதரஸா, மஸ்ஜித், பள்ளிக்கூடம், மற்றும் காலை – மாலை மார்க்க அமர்வுகளில், மார்க்கக் கல்வியை முழுமைப் படுத்த, இந்நூல் ஒரு மைல் கல் ஆகும்.

6- இது ‘வாட்ஸ் அப்’ மற்றும் ‘ஆடியோ’ வகுப்புகளில், பதிவிடத் தேவையான ஆவணம்; கருத்துக்களின் சாரம்.

7- சமூக சீர்திருத்தத்திற்காகவும், அழைப்புப் பணிக்காகவும் இயங்குகின்ற இஸ்லாமிய மையங்கள் மற்றும் சீர்திருத்த மன்றங்களின் பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் உரிய வருடாந்திர பாடத்திட்டமாகும்.

8- மார்க்கக் கல்வியைப் பெறுவதில் சீரிய துவக்கத்தைக் காண விரும்பும், அனைத்துத் துறையினருக்கும் பயனளிக்கும்.

9- தமது பாடத்தின்போது, இடையிடையே இஸ்லாத்தின் ஒழுங்குகளை மாணவருக்குக் கற்பிக்க விரும்பும் பொதுவான ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படும்.

10- பொதுமக்களுக்கு இடையே மார்க்கப்பணியாற்ற விரும்பும், ஆலிம்கள் மற்றும் இறை அழைப்பாளர்களுக்கான பாடத்திட்டம்.

11- நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலின்படி சமூக மாற்றத்தைக் காணவிரும்பும், சிந்தனையாளர்களுக்கும் பலன் தரும் நூல்.

12- தமது ஓய்வு வயது (retirement of age) வரை, மார்க்கம் அறியாதிருந்து – பிறகு அதனை விரைவாகக் கற்றிடத் துவங்கும், முதியவர்களுக்கும் இந்நூல் பயனளிக்க வல்லது.

13- பள்ளி வாசல் நிர்வாகிகள், ஆரம்பப் பள்ளிகளை நடத்துவோர், மற்றும் சமூக சேவகர்கள், சிறுவர்களுக்கான, காலை மாலை வகுப்புகளை நடத்த விரும்பினால், அதற்குரியப் பாடத்திட்டமாகவும் (syllabus) இந்நூல் திகழ்கிறது.

## சிந்திக்க... ஒரு நிமிடம்.

திருக்குர்ஆனைச் சிந்திப்போர் வெறும் அறிவையும், மொழியையும், மையமாக வைத்து சிந்திக்கலாகாது. சரியான ஹதீஸ்கள் மற்றும் நபித்தோழர்கள், தாபியீன்கள், தபவுத் தாபியீன்களின் விளக்கத்திற்கு முதலிடம் தரவேண்டும். இந்த வழிமுறையின் வெளிச்சத்தில்தான் நம் அறிவாற்றலையும், மொழிப் புலமையையும் கையாளவேண்டும்.

நம்மில் ஒருவரிடம், ஏதாவது ஓர் அத்தியாயம் குறித்து, “நீங்கள் அறிந்ததைக் கூறுக!” என வினவினால், அதிகமான மக்களால், உரிய விளக்கத்தைச் சரியாகத் தர இயலாது. ஆனால் அல்ஹம்து லில்லாஹ்! இந்நூல், திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள, ஒவ்வொரு அத்தியாயத்திலுள்ள விபரங்களில் இருந்தும், அவசியம் மற்றும், அதிமுக்கிய மானவைகளைப், பின்வருமாறு திரட்டித் தருகிறது.

- இன்ன அத்தியாயத்தின் நோக்கம் என்ன?
- இன்ன அத்தியாயத்தில் என்னென்ன தலைப்புகள் இடம் பெற்றுள்ளன.
- இன்ன அத்தியாயத்தில் நம் வாழ்க்கைக்கு கிடைக்கின்ற படிப்பினைகள் யாவை?
- இன்னின்ன அத்தியாயங்களில், இடம்பெறுகின்ற நுட்பமான அம்சங்கள் என்னென்ன? நமக்குள்ள போதனைகள் என்ன? வழிகாட்டுதல் என்ன? இன்னும் பல.

750 பக்கங்கள் கொண்ட இந்நூல், மூல நூலில் மூன்றில் ஒரு பகுதியாகும். அசல் நூலில் 2500 பக்கங்கள் அடங்கியுள்ளன. அனைத்து பக்கங்களையும், நமது வெப்சைட் www.askislampedia.com – ல் காணலாம். பொறுப்பேற்பவர் (sponsor) எவரும் முன்வந்தால், அனைத்தையும் அச்சில் கொண்டு வந்திடலாம்.

## இந்த நூலால் நன்மையைச் எப்படி சேகரிக்கலாம்?

‘‘திருக்குர்ஆனின் நன்மைகளும் படிப்பினைகளும்’’ என்கிற இந்நூலின் மூலம், நன்மைகளைப் பெற்றிட, உங்களுக்கு நாம் வழங்கிடும் அரிய வாய்ப்பு இதோ:-

- இறைவழியில் இந்நூல் வழங்கப்பட, சில பிரதிகளுக்கான பொறுப்பை (ஸ்பான்ஸர்) ஏற்கலாம்.
- இந்நூலின் சில பிரதிகளை விலைக்கு வாங்கி, பிறருக்கு இலவசமாக வழங்கலாம்.

இன்ஷா அல்லாஹ்...இப்படிச் செய்தால் இது உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், இது ‘நிலையான தர்மமாக’ அமையும். மறைந்து விட்ட பெற்றோருக்கான, (முறையான) ‘ஈஸாலுஸ் - ஸவாபாகவும்’ அமையும். விபரங்கள் இதோ:-

- ரூபாய் 15,000 ல் 25 புத்தகங்கள்
- ரூபாய் 30,000 ல் 50 புத்தகங்கள்

- ரூபாய் 50,000 ல் 84 புத்தகங்கள்
- ரூபாய் 1,00,000 ல் 160 புத்தகங்கள்
- ரூபாய் 06,00,000 ல் 1000 புத்தகங்கள்
- ரூபாய் 09,00,000 ல் 1500 புத்தகங்கள்

## நன்றி எனும் அன்பளிப்பு

இச்சமயத்தில் எனக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய, உலமாப் பெருமக்கள் மற்றும் நண்பர்கள் யாவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.., குறிப்பாக அஷ்ஷைக் அப்துல்லாஹ் உமரீ, அஷ்ஷைக் நூருத்தீன் உமரீ, அஷ்ஷைக் முயீனுத்தீன் உமரீ, அஷ்ஷைக் உஸ்மான் உமரீ, அஷ்ஷைக் அபூகுஹாபா முஆத் உமரீ, அஷ்ஷைக் அப்துல் வாஸி∴ உமரீ, அஷ்ஷைக் முஜாஹித் உமரீ, அஷ்ஷைக் மாஜித் உமரீ, மற்றும் அல் ஹாபிழ் அப்துல் அஜீஸ் (அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்தருள்வானாக!).., இவர்களுக்கும் Ask Islam pedia வின் பணிகளில், இணைந்திருக்கின்ற அனைவருக்கும், இந்நூலை வெளியிடப், பொருளாதார உதவிகளைச் செய்வதோடு - இந்நூலை நேர்த்தியாக அச்சிடுவதற்காக, அளப்பரிய தம் முயற்சிகளை உளப்பூர்வமாக தந்துதவுகின்ற, ARAS printers பொறுப்பாளர்களுக்கும், எண்ணிலா நன்றிகளை மனப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ்ᵚ தஆலா தன் நற்கூலிகளை எல்லோருக்கும் தந்தருள்வானாக!! ஆமீன்.

அடுத்து வாசகர்களுக்குச் சேவை செய்வதற்காக – திருக்குர்ஆனுக்குத் தொண்டாற்றி - அவர்களுக்கு இந்நூலைப் பரிசளிக்க என்னால் முடிகிறது என்றால், அதற்குக் காரணம்..,உமராபாத்தின் ஜாமிஆ தாருஸ்ஸலாம் மற்றும் அல் மதீனாவின் - ஜாமிஆ இஸ்லாமியா என்கிற, இரண்டு நிறுவனங்களின் ஆசிரியர்களும் பொறுப்பாளர்களுமே..! இவர்களால்தான் இன்று நான் இந்நிலையை அடைந்துள்ளேன். எனவே அவர்களுக் கெல்லாம் எல்லாம் வல்ல அல்லாஹ், மறுமையில் ‘மீஸான்’ தராஸில், நன்மையின் எடையை கனமாக்கித் தருவானாக!

மேலும் ‘அல்லாஹ்ᵚ தஆலா’விடம், நான் இப்படிப் பிரார்த்திக்கிறேன். ‘‘யா அல்லாஹ்! இந்த எங்களின் எளிய முயற்சியால், மறுமையில் எங்களுடைய நன்மையின் எடை கூடுவதற்கு , அருள்புரிவாயாக! உன் பேரருளாலும் பெருங்கிருபையாலும், சுவனத்தில் ‘ஜன்னதுல் பிர்தௌஸைத்’ தந்தருள்வாயாக!’’ ஆமீன்.

அஷ்ஷைக் அர்ஷத் பஷீர் உமரீ மதனீ(ஹபிழஹுᵚல்லாஹ்)
Ask Islam pedia – நிறுவனர் மற்றும் டைரக்டர்

## நூல் - கொள்கை நிலைகள்

ஒரு முஸ்லிம், திருக்குர்ஆனோடு மிகவும் உறுதியான தொடர்பை வைத்திருக்க வேண்டும்.இதனை நடைமுறைப் படுத்துவதற்காகவே, இந்நூலை நாம் நெறிப்படுத்தியுள்ளோம். இத்தொடர்பிற்கான முயற்சியில், நாம் எடுத்துவைத்த எட்டுக்களில், இந்தப் புத்தகம் 'இரண்டாம் எட்டு' ஆகும்.'பத்து நாட்களில் அரபி இலக்கணம்' என நாம் வகுத்த பாடத்திட்டமே.. இதற்காக நாம் மேற்கொண்ட முயற்சியின் 'முதல் எட்டு' ஆகும். இதன் மூலமாக, திருக்குர்ஆனின் அறிமுகத்தைப் பெறுவது, எளிதாகும் - எனும் நம்பிக்கை உள்ளது,(இன்ஷா அல்லாஹ்)

அல்ஹம்து லில்லாஹ்! - ''திருக்குர்ஆனின் நோக்கங்களும், படிப்பினைகளும்'' என்கிற இந்நூல், பெருங்கடலைச் சீசாவில் அடைப்பதற்கு ஒப்பானதாகும். அஷ்ஷைக் அர்ஷத் பஷீர் உமரீ மதனீ அவர்களின், 12வருட ஆய்வு மற்றும் அனுபவத்தின் (experience) விளைவு ஆகும். பிறகு இதனைப் புத்தக வடிவில் கொண்டுவர, மேலும் மூன்று ஆண்டுகள் கடின உழைப்பு தேவைப்பட்டது. அத்துடன் இந்த ஆய்வை, நூலுருவில் மாற்றிட - மொழியின் தரத்தை மேம்படுத்திட - மேலாய்வு செய்திட – பத்து உலமாக்களிடம் உதவி பெறப்பட்டுள்ளது.

Ask Islam pedia – 'உலமா' அணி



# சில அடிப்படை—விபரங்கள்

(நூலின் உள்ளே செல்வதற்கு முன் கவனிக்கப் படவேண்டியவை)

**I – திருக்குர்ஆன் விளக்கம் - படித்தரங்கள்.**

பொதுவான ஒரு மனிதன், திருக்குர்ஆனை விளங்க இயலுமா? இயலாதா?

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுடைய கூற்றின் ஒளியில், இதற்கான விடையை விளங்க முடியும் - இன்ஷா அல்லாஹ்

1 அரபு மொழி பேசுவோர் மட்டும், விளங்குகின்ற வசனங்கள். ஏனெனில் அரபி அவர்களின் தாய்மொழியாகும்.

2 சாதாரணமான மனிதனும் புரிந்து கொள்ளும் வசனங்கள்; (அரபி மொழியை) அறியாமை திருக்குர்ஆனை விளங்க தடையாகாது.

3 ஆலிம்கள் மட்டும் சிறப்பாக விளங்குகின்ற வசனங்கள்.

4 வேறு யாரும் அறிய இயலாத - அல்லாஹ் மட்டுமே அறிந்துள்ள வசனங்கள். (காண்க: தப்ஸீர் தபரீ – பாகம்1: பக்கம்70)

**II திருக்குர்ஆன் அத்தியாயங்களின் நோக்கங்களும், குறிக்கோள்களும் (சட்டங்களும் விதிமுறைகளும்)**

கேள்வி : திருக்குர்ஆனின் நோக்கங்களையும், குறிக்கோள் களையும் அறிவது சாத்தியமா?

பதில்:- அஷ்ஷைக் ஸாலிஹ் அல்-உவைத் அவர்கள், இதற்கான விடையைத் தன் பிரசித்தி பெற்ற – சிறப்பான நூல், ‘அல் மராஹிலுஸ்-ஸிமானில்’ தருகிறார்கள். இதில் திருக்குர்ஆனின் நோக்கங்களை அறிதல் சாத்தியமே! என்கிறார்கள். மேலும் இந்நூலில் குறிப்பாக அவர்கள், அஷ்ஷைக் ஸாலிஹ் ஆலுஷ்ஷைக் அவர்கள் இதனை அனுமதிப்பற்காக, தன் சொற்பொழிவில் குறிப்பிடுகின்ற நிபந்தனைகளை, விரிவாகவே முன்வைக்கிறார்கள். ஆலுஷ்ஷைக் அவர்களே, அஷ்ஷைக் ஸாலிஹ் அல் உவைத் அவர்களுக்கு, உந்துதலாகத் திகழுகிறார்கள்.

(மேலதிக விபரங்களுக்கு: 112 - المراحل الثمان)

(محاضرة الشيخ صالح آل الشيخ: مقاصد السور وآثاره في فهم التفسير)

**அத்தியாயங்களின் நோக்கங்கள்:** பொதுவாக, எதற்காக ஒரு அத்தியாயம் அருளப்படுகிறதோ, அந்தப் பொதுவான அர்த்தமே அவ்வத்தியாயத்தின் நோக்கம் ஆகும்.அல்லது ஆயத்துகள் எனப்படும் இறை வசனங்கள், எந்தக் குறிப்பிட்ட தலைப்பை மையமாக வைத்துச், சுற்றி வருகின்றனவோ, அந்தக் குறிப்பிட்ட தலைப்பு, அத்தியாயத்தின் நோக்கமாகக் கருதப்படும்.

ஒரு ஸூராவின் தலைப்பு (மவ்ழூ.ஃ), அல்லது நோக்கம் (மக்ஸூத்), அல்லது நோக்கங்கள் (மகாஸித்) என்பதன் கருத்து இதுவே ஆகும்.

இவ்வாறு, முற்கால அறிஞர்களிடத்தில் இந்த மக்ஸத்(நோக்கம்) மகாஸித் (நோக்கங்கள்) என்கிற, பெயர் சூட்டுதல், இருக்கவில்லை. இது எவ்வாறெனில், ஸஹாபாக்களிடையே, அதிகமான கலைகள் நடைமுறையில் இருந்தன. ஆனால் அவைகளுக்குக் குறிப்பிட்ட பெயர்கள் எதுவும் அப்போது சூட்டப்படவில்லை, உதாரணமாக இல்முன்-நஹ்வு (இலக்கணம்), பலாஅஹ் (இலக்கியம்), உஸூலுல் பிக்ஹ் (சட்ட விதிகள்), முஸ்தலஹுல் ஹதீஸ் (ஹதீஸ் கலை வழக்கு மொழிகள்), இன்னும் சில..

இவைகளை பிற்கால உலமாக்கள் இஸ்திக்ரா.ஃ (பல கோணங்களிலும் ஆய்ந்து முடிவெடுத்தல்) மற்றும் ததப்பு.ஃ (நுட்பங்களைக் கையாள்வதில் முந்தைய அறிஞர்களைப் பின் தொடர்தல்) செய்து இப்பெயர்களைச் சூட்டியுள்ளார்கள். லா முஷாஹத பில் இஸ்திலாஹ் (வழக்குச் சொற்களில் மாற்றம் இல்லை.)

ஆனால் ஸூராவின் தலைப்பை(மவ்ழூ.ஃ) பொறுத்தவரை, முற்கால அறிஞர்களின் ‘தப்ஸீர்’ - விரிவுரை களிலும், பேசப்படவில்லை; பிற்கால தப்ஸீர்களிலும் இல்லை.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1) அத்தியாயத்தின் தலைப்பைப்பற்றிய கலை, ஒரு வகையில் அல்லாஹ்வின் வேத விளக்கத்தில், தலையிடுவது ஆகும். இதனால் சில உலமாக்கள், இதனை மறுக்கிறார்கள். மேலும் இது மிகைப்படுத்துதல், மற்றும் சுற்றிவளைத்தல், போன்று இருக்கிறது.
2) அதிகமான விரிவுரையாளர்கள், வசனங்களுக்கும், வார்த்தைகளுக்கும் விளக்கம் தருவதே போதும் என நினைக்கிறார்கள். அஹ்லுர் ர.ஃயி – சுய விளக்கமளிப்போர், மற்றும் அஹ்லுல் அஸர் - ஹதீஸ் ஒளியில் விளக்கமளிப்போர் வழிமுறையும் இப்படித்தான் இருந்திருக்கிறது.

அடுத்து, வசனங்களுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிப் பார்ப்போமேயானல், முற்கால அறிஞர்களிடம் எதுவும் கிடைக்கவில்லை. எனவே இது குறித்து (பிற்கால விரிவுரைகளில்) மூன்று விதமான கருத்துகள் உள்ளன.

முதல் கூற்று: அல்லாமா ஷவ்கானீ (ரஹ்) அவர்களைப் போன்ற பிற்கால அறிஞர்கள் குழுவினர் இப்படிக் கூறுகிறார்கள்:“பொதுவாக அத்தியாயங்களுக்கு மத்தியிலும், வசனங்களுக்கு இடையேயும், தொடர்புகள் எதுவும் கிடையாது.

பத்ஹுல் கதீர் (1:72) ல் அல்லாமா ஷவ்கானீ (ரஹ்) பின்வருமாறு எழுதுகிறார்கள: “சில விரிவுரையாளர்கள், ஏவப்படாத கல்வியை நடைமுறைப்படுத்த முனைகிறார்கள். எந்தக் கடலில் நீந்துகின்ற

பொறுப்பு தரப்படவில்லையோ, அந்தக் கடலில் நீந்துவதற்காகக் குதிக்கிறார்கள். எந்தக் கல்வியில், ஒரு பயனும் கிடைக்காதோ, அதில் ஆர்வமாக இறங்கியுள்ளார்கள். மட்டுமல்ல – அல்லாஹ்வின் வேத விஷயத்தில், தடுக்கப்பட்டவைகளில் உழலுகிறார்கள். திருக்குர்ஆன் வசனங்களின் வரிசைகளுக் கேற்ப, அத்தியாயங்களுக்கு மத்தியிலும், வசனங்களுக்கிடையிலும், தொடர்புகளை உருவாக்க முயன்று, தோல்வியைத் தழுவியுள்ளார்கள். அதற்காக அவர்கள், சிறிதும் நியாயமின்றி – மிகைப்படுத்தி – பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். இவை அரபிகளின் பலாஅஹ் - இலக்கியத்தோடு பொருந்தாத பட்சத்தில், இறைவனுடைய இலக்கியத்துடன் எப்படி ஒத்துப்போகும். இதற்காக, அவர்கள் தனி நூல்களை எழுதியதோடு மட்டுமின்றி – இதையே நூல்கள் எழுதுவதற்கான நோக்கமாக ஆக்கிக் கொண்டார்கள்.

இரண்டாம் கூற்று: அல்லாமா புர்ஹானுத்தீன் அல்-புகாஈ (ரஹ்)(ஹி885) அவர்கள்,

نظم الدرر في تناسب الآيات والسور என்கிற தன் நூலில் இப்படிக் கூறுகிறார்கள்: ‘‘எல்லா அத்தியாயங்களுக்கும், எல்லா வசனங்களுக்கும், தனித்தனியாக தலைப்புகளும் நோக்கங்களும் உண்டு; முன் - பின்னாக இடம்பெறும் வசனங்களோடு, தொடர்பும் உண்டு’’. அல்லாமா ஸுயூத்தீ (ரஹ்) அவர்களும் இதையே ஆதரிக்கிறார்கள். அபூபக்ர் இப்னுல் அல் அரபி (ரஹ்) அவர்களோ, இக் கருத்தை வலியுறுத்தத், தான் ஒரு கனமான நூலைத் தந்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

மூன்றாம் கூற்று: பொதுவாக அத்தியாயங்கள் மற்றும் வசனங்கள் யாவும், தனித் தனித் தலைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளன. மேலும் பொதுவாகப் பார்ப்போமேயானால், எல்லா வசனங்களின் தொடர்புகளும், தமக்கு முன்னும் பின்னுமாக இடம் பெற்றுள்ள வசனங்களோடுதான் இருக்கும். ஆனால் எல்லா வசனங்களிலும், அத்தியாயங்களிலும் இத் தொடர்பு கட்டாயமில்லை. அப்படியே இருந்தாலும், அனைத்து வசனங்களுக்கும், மொத்த அத்தியாயங்களுக்கும் தலைப்பை அறிவது, கடினமானது ஆகும். (இயலாமை ஓரளவிற்கு ஏற்கப் படலாம்தானே..!)

எது சரியான கூற்று?:- மூன்றாம் கூற்றே ஏற்றமானதாகத் தெரிகிறது. இமாம் ஸர்கஷி (ரஹ்) அவர்கள், தன் ‘புர்ஹான்’ எனும் நூலில் இக்கருத்தையே கூறுகிறார்கள். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்களின் மாணவர், இப்னுல் கையிம் (ரஹ்) மற்றும் இமாம் ராஸி (ரஹ்) இதனையே சரி என்கிறார்கள். தாஹிர் பின் ஆஷூர் (ரஹ்) அவர்களும், தன்னுடைய ‘التحرير والتنوير’ எனும் நூலில் இக்கருத்தையே ஆதரிக்கிறார்கள்.

இவர்கள் மூன்றாம் கருத்தை ஆதரிப்பதற்கான காரணம்,

திருக்குர்ஆனின் இந்த இரண்டு வசனங்களே!

(11:1) الر كِتَابٌ أُحْكِمَتْ آيَاتُهُ ثُمَّ فُصِّلَتْ مِنْ لَدُنْ حَكِيمٍ خَبِيرٍ

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلَافًا كَثِيرًا(04:82)

இவ்விரு வசனங்களும், ‘இறை மறையின் வசனங்கள் அனைத்தும், தெளிவானவை; முரண்பாடு அற்றவை’ எனச் சொல்கின்றன. உண்மையிலே இது, அல்லாஹ்வின் திருமறை முழுமை பெற்றிருப்பதைப் புகழுவதாகும். இறைவசனங்கள் முந்தைய மற்றும் பிந்தைய வசனங்களுடன் பொருந்தும் வகையில், அமையாத வரை அவைகளைப் புகழ இயலாதே! பொதுவாக ஒரு சூரா, முழுமையாக ஒரு தலைப்பையோ, நோக்கம் அல்லது நோக்கங்களையோ, சூழ்(ந்து நிற்)கிறது எனில், முரண்பாடு இல்லையென்பதற்கு அதுவே அத்தாட்சியாகும்.

இத் தலைப்பின் கீழ் பேசுவோர், இரண்டு விஷயங்களைக் கவனிப்பது கட்டாயமாகும்.

1) இறைவசனங்களில் தென்படுகின்ற தலைப்பு மற்றும் நோக்கங்களைப் பதிவிடும்போது, மிகைப்படுத்தலோ, வலிந்து திணித்தலோ – கூடாது.(இமாம் بقاعي (ரஹ்) அவர்களுக்கு மாற்றமாக)

2) இத் தலைப்பின் கீழ், வசனங்கள் மற்றும் அத்தியாயங்களின் நோக்கங்களைப் பதிவிடுகிறவர்கள்.., முன் சென்ற மார்க்க அறிஞர்களுடைய (அஸ்லாப்) சொற்களை, அறிந்திருக்க வேண்டும். மேலும் எந்த வகையிலும் பிழைகள் நேராதிருக்க, இல்முல் பலாஅஹ் - இலக்கியத்தைக், குறிப்பாக அணி மற்றும் உரை இலக்கணம் (இல்முல் மஆனீ வல் பயான்) நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும். முன் சென்ற மார்க்க அறிஞர்களுடைய (அஸ்லாப்) விரிவுரைகளைப், படித்துப் பார்க்கின்ற போது, அவர்கள் அத்தியாயங்களின் நோக்கங்களில், கவனத்தைச் செலுத்தி இருப்பதனைக் கண்டு கொள்ளலாம். இதனால்தான், இவர்களின் விரிவுரைகளை, ஆய்வு செய்கிறபோது, ‘‘அவ் விரிவுரைகளை அத்தியாயங்களின் நோக்கங்களோடு இணைத்துப் பார்க்காத வரை, அவர்களுடைய விரிவுரையின் காரணத்தைத் தெரிந்திட இயலாது’’ என்கிற உண்மையை அறிந்திடலாம்!’’.

## III நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை விளங்கிட ஷரீஅத்தின் வழிமுறைகள்.. திருக்குர்ஆன் விரிவுரையாளர்களுடைய அணுகுமுறையின் ஒளியில்..!

மூன்று வழிமுறைகளில், நோக்கங்களை விளங்குவது சாத்தியமாகும்.

1 ஒரு ‘ஸூரா’வின் நோக்கம் குறித்து திருக்குர்ஆன் விரிவுரையாளர்களில் ஒருவர், குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை எடுத்துரைத்து, ஆதாரமாகக் கொள்ளத்தக்க வகையில், அது இடம் பெற்றிருக்க வேண்டும்.

உதாரணமாக 'ஸூரா' அல்-இக்லாஸ்..! விரிவுரையாளர்கள், இந்த 'ஸூரா'வைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்..., ''இது 'தகவல் சார்ந்த விளக்கத்தைத்' தருகிறது! (தவ்ஹீதின் மூன்று முக்கிய அம்சங்களில்) 1.அல்லாஹ்வின் திருப்பெயர்கள் மற்றும் தன்மைகள், 2.நிர்வாகத்தில் தவ்ஹீத் ஆகியன இதில் உள்ளன''. அவ்வாறே 'ஸூரா' அல்-காபிரூன்..! இதில் 'ஏவப்படுகின்ற செயல் சார்ந்த விளக்கம்' இருக்கிறது. இது (தவ்ஹீதின் மூன்றாவது முக்கிய அம்சம்) 'வணக்க வழிபாட்டில் தவ்ஹீத்' - 'தவ்ஹீதுல் உலூஹிய்யஹ்' என அறியப்படுகிறது. ஸூரா அந்-நஹ்லை'-ப் பொறுத்தவரை, அது 'நி∴மத்துகள்' - அருட்கொடைகள் விஷயத்தில் அருளப்பட்டிருக்கிறது. இது போன்ற, விரிவுரையாளர்களின் கூற்றுக்கள் (இவ்விஷயத்தில்) ஆதாரங்களாக அமைந்துள்ளன.

2 ஒரு ஸூராவின் தலைப்பு, அந்த ஸூராவின் பெயரைக் கொண்டோ, அல்லது ஆரம்பத்தைக் கொண்டோ, அல்லது இரண்டைக் கொண்டுமோ வெளிப்படும். இதற்கான உதாரணம் ஸூரா அல்-கியாமஹ் - மறுமை நாள் ஆகும். மறுமையோடு தொடர்புள்ள இந்த ஸூரா' வின் நோக்கம், அதன் பெயர் மற்றும் ஆரம்பத்தைக் கொண்டே!(..வெளிப்படுகிறது).

எனவே (கியாமஹ்) என்கிற அல்லாஹு தஆலாவின் இந்த சொல்லைப் படிக்கிறபோது, நமக்குள் இக் கேள்வியைக் கேட்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்: ''இந்த ஸூரா வின் வசனங்களுக்கும், இந்த ஸூரா வின் தலைப்பு மற்றும் நோக்கங்களுக்கும் இடையே, இருக்கின்ற தொடர்பு என்ன?'' (இவ்வாறு விடைதேடும்போது முந்திய மற்றும் பிந்திய வசனங்களையும், கவனத்தில் கொள்க!)

பதில்: எந்த ஒரு அடியானும், இந்த வசனங்களை சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்காமல், மேலோட்டமாகப் படிப்பதோ- விரைவாகப் படித்துக் கொண்டு செல்வதோ உகந்ததல்ல..., எனும் உண்மை உணர்த்தப் படுகிறது.

3 இஸ்திக்ரா∴. - ஆய்வு செய்தல்: ஒரு ஸூரா – வின் வசனங்களை (பல கோணங்களிலும் நன்கு) சிந்திப்பதன் மூலம் (அதன் நோக்கங்களைப் பெறலாம்.) உஸூலிய்யூன் - மார்க்கச் சட்ட விதிகளைக் கையாளுவோர், கூறுகிறார்கள்:'இஸ்திக்ரா' முழுமையானதாகவும், மேம்பட்ட நிலையிலும் இருக்குமேயானால், அச் சமயம் இது பலனளிக்கிறது. இஸ்திக்ரா, பகுதியாக – 'ஜுஸ்இ'யாக இருந்தால் அதனைப் பொருட்படுத்தக் கூடாது. உதாரணமாக ஸூரா' அல்-மாவூன். இவ்வத்தியாயம், சில உன்னதமான நற்குணங்களைப் பற்றிப் பேசுகிறது. இந் நற்குணங்கள் விசுவாசிகளுக்குக் கடமையானவை. மேலும் இவை ஏதேனும் ஒன்றில், குறை வைத்தவர், ஒரு மார்க்கக் கடமையை

விட்டவராவார். இன்னும் தடுக்கப்பட்ட நடத்தைகளில் ஒன்றைப், பெறுபவரோ, அவர் மறுமையை மறுத்தவர்களின் நடத்தையைப் பெறுகிறார் என்றும் கூறுகிறது.

இதற்காக இன்னும் சில (ஸூராக்களின்) உதாரணங்கள்: ஸூரா அந்-நஹ்ல், ஸூரா தாஹா, ஸூரா மர்யம், ஸூரா அல்-அன்பியா. இதன் விளக்கம் சென்று விட்டது.

## திருக்குர்ஆன் விரிவுரை மற்றும் விளக்கங்களுக்காக இக்கால பயன்மிகு நூல்கள் விபரம்

(மேலதிகப் பயன் கருதி, உங்களிடம் தரப்படுகிறது)

| | | |
|---|---|---|
| 1 | وقوف القران وأثرها في التفسير | د.مساعد بن سليمان الطيار |
| 2 | شرح مقدمة التسهيل لعلوم التنزيل لابن جزي | د.مساعد بن سليمان الطيار |
| 3 | تفسير جزء عمّ | د.مساعد بن سليمان الطيار |
| 4 | مقالات في علوم القران وأصول التفسير | د.مساعد بن سليمان الطيار |
| 5 | مفهوم التفسير والتأويل والاستنباط والتدبر والمفسر | د.مساعد بن سليمان الطيار |
| 6 | فصول في أصول التفسير | د.مساعد بن سليمان الطيار |
| 7 | شرح مقدمة في أصول التفسير | د.مساعد بن سليمان الطيار |
| 8 | أنواع التصنيف المتعلقة بتفسير القران الكريم | د.مساعد بن سليمان الطيار |
| 9 | التفسير اللغوي للقران الكريم | د.مساعد بن سليمان الطيار |
| 10 | المحرر في علوم القران | د.مساعد بن سليمان الطيار |
| 11 | العلمية للدراسة التفسير المنهجية | د.مساعد بن سليمان الطيار |
| 12 | بحوث في التفسير | د.مساعد بن سليمان الطيار |
| 13 | مفهوم التفسير والتأويل والاستنباط والتدبر والمفسر | د.مساعد بن سليمان الطيار |
| 14 | تفسير جزء عمّ | د.مساعد بن سليمان الطيار |
| 15 | شرح مقدمة التفسير للسيوطي | د.عبد الكريم عبد الله الخضير |
| 16 | شرح على رسالة في أصول التفسير للسيوطي | د.عبد الكريم عبد الله الخضير |
| 17 | الاعجاز البياني في ترتيب أيات القرأن الكريم وسوره | أحمد يوسف القاسم |
| 18 | المراحل الثمان لطالب فهم القرأن | صالح العويد |
| 19 | علوم القرأن | صبحي صالح.د |
| 20 | شرح أصول التفسير | الشيخ ابن عثيمين رحمه الله |

## அத்தியாயங்களின் அளவைப் பொறுத்து ...
## அவைகளின் வகைகள

நபி (ஸல்) கூறினார்கள்: ‘‘எனக்கு தவ்ராத்திற்குப் பகரமாக ‘ஸப்வு’ (ஏழு நெடிய) அத்தியாயங்கள், தரப்பட்டுள்ளன.‘ஸபூரு’க்குப் பகரமாக, ‘மிவூன்’ வசனங்கள் அருளப்பட்டுள்ளன. இன்ஜீலுக்குப் பகரமாக, ‘மஸானீ’ வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் ‘முபஸ்ஸல்’ வசனங்கள் மூலம் சிறப்பிக்கப்பட்டுள்ளேன்.’’ (அஹ்மது - ஹஸன்)

ஸப்வு திவால்: அல்-பகரா, ஆலு இம்ரான், அந்-நிஸா, அல்-மாயிதா, அல்-அன்ஆம், அல்-அ.்.ராப், அல்-அன்பால், அத்-தவ்பா, என ஏழு அத்தியாயங்கள் உள்ளன.(அல்-அன்பால், அத்-தவ்பா என இரண்டு ஸூராக்களும் ஒன்றாகவே கருதப்பட்டுள்ளன)

அல்-மிவூன்: இவை மேற்கண்ட ஏழு ஸூராக்களையும் அடுத்து உள்ளவை. இந்த அத்தியாயங்கள் ஒவ்வொன்றிலும், நூறுக்கும் மேற்பட்ட வசனங்கள் இருக்கின்றன. (ஒரு கூற்றின்படி ஸூரா’ யூனுஸ் முதல் ஸூரா அல்-அன்கபூத் வரை, இருப்பவை)

அல்-மஸானீ: அல்-மிவூன் அத்தியாயங்களைத் தொடர்ந்து வருகின்ற ஸூராக்களே இவை; நூறு வசனங்களை விட குறைவான வசனங்கள் கொண்டவை. மேற்கண்ட ‘ஸப்வு திவால்’ மற்றும் ‘மிவூன்’ அத்தியாயங்களை விட, இப் பிரிவில் இருப்பவை அதிகமாக ஓதப்படுகின்றன. எனவே இப்பெயர் பெற்றுள்ளன. (ஒரு கூற்றின் படி ஸூரா ‘ரூம்’ முதல் அத்தியாயம் ஆகும் ‘அல்-ஹுஜ்ராத்’ இறுதி அத்தியாயம் ஆகும்.) நபிமார்களின் சரித்திரங்களும், நிகழ்வுகளும் இடம் பெற்றிருப்பதால் திருக்குர்ஆனும் இப் பெயரைப் பெற்றுள்ளது. ஸூரதுல் பாதிஹாவும் ‘ஸப்வுல் மஸானீ’ என்றழைக்கப்படுகிறது.

அல்-முபஸ்ஸல்: அல்-மஸானீ அத்தியாயங்களுக்குப் பிறகு இடம் பெற்றிருக்கும் அத்தியாயங்கள், அல்-முபஸ்ஸல் எனப்படுகின்றன. இவ்வகை அத்தியாயங்களுக்கு மத்தியில், ‘பிஸ்மில்லா’க்கள் மூலமாக அதிகமான பிரிவுகள் ஏற்பட்டுள்ளதால் இவை, ‘அல்-முபஸ்ஸல்’ என்கிற பெயர் பெற்றுள்ளன. மாற்றப்பட்ட வசனங்கள், குறைவாக உள்ளதால், இவ்வத்தியாயங்களுக்கு ‘முஹ்கம்’ என்கிற பெயரும் உண்டு. முபஸ்ஸல் அத்தியாயங்கள் எவை என்பதில், மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும்,‘ஸூரா காப்’ முதல் ஸூரா அந்-நாஸ் வரை உள்ளவை என்பதே, பரவலான கருத்து..!

முபஸ்ஸல் மூன்று வகைப்படும்.

1) திவால் (நெடியது) : ஸூரா காப் முதல் அந்நபா வரை
2) விஸாத் (நடுத்தரமானது) : ஸூரா அந்நபா முதல் ஸூரா அள்-ளுஹா வரை
3) கிஸார் (சிறியது): ஸூரா அள்ளுஹா முதல் ஸூரா அந்-நாஸ் வரை

# அட்டவணை


| பாடங்கள் | தலைப்புகள் | நோக்கங்கள் | பக்கம் | அத்தியாயம் | எண |
|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 16 | الفاتحة | 1 |
| 209 | 104 | 12 | 28 | البقرة | 2 |
| 58 | 53 | 9 | 51 | آل عمران | 3 |
| 49 | 51 | 5 | 63 | النسأ | 4 |
| 37 | 29 | 5 | 73 | المائدة | 5 |
| 122 | 39 | 10 | 83 | الأنعام | 6 |
| 77 | 32 | 4 | 96 | الأعراف | 7 |
| 37 | 20 | 3 | 110 | الأنفال | 8 |
| 25 | 34 | 7 | 118 | التوبة | 9 |
| 54 | 29 | 3 | 127 | يونس | 10 |
| 27 | 18 | 6 | 138 | هود | 11 |

| பாடங்கள் | தலைப்புகள் | நோக்கங்கள் | பக்கம் | அத்தியாயம் | எண் |
|---|---|---|---|---|---|
| 51 | 24 | 3 | 144 | يوسف | 12 |
| 19 | 14 | 7 | 155 | الرعد | 13 |
| 37 | 15 | 6 | 161 | ابراهيم | 14 |
| 33 | 10 | 6 | 170 | الحجر | 15 |
| 78 | 25 | 6 | 178 | النحل | 16 |
| 79 | 24 | 4 | 191 | الإسرأ | 17 |
| 72 | 16 | 7 | 204 | الكهف | 18 |
| 43 | 10 | 10 | 217 | مريم | 19 |
| 86 | 14 | 5 | 228 | طه | 20 |
| 91 | 10 | 8 | 245 | الأنبيأ | 21 |